WA digital inclusion project

# கணினித் திறன் பயிற்சி – மின்னஞ்சல்

## ‘சமூக வெற்றியாளர் திட்டம்’

2025

lotterywest

wacoss wa council of social service

# பயிற்றுநருக்கான குறிப்புகள்: How to email

- பங்குபற்றுநர்களுக்காக இந்தக் கையேடுகளை அச்சிட்டுக்கொள்ளுங்கள்:
- மின்னஞ்சல் அனுப்புதல்

- இந்தப் பாடத்தை அளிக்கும் பொழுது உங்களுடைய பயன்பாட்டிற்காக இந்த ஒளித்தகடுகளின் பிரதி ஒன்றை, குறிப்புகள் உள்ள பகுதியுடன் அச்சிட்டு வைத்துக்கொள்ளுங்கள்.
- வாசியுங்கள்:
  - இந்த ஒளித்-தகடுகளை வாசித்து அவற்றில் அடங்கியுள்ள விடயங்கள் உங்களுக்குப் பரிச்சியமானவை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்,
  - பங்குபற்றுநர்களுக்கான கையேட்டினை வாசியுங்கள்.
- உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருப்பின், அமர்விற்கு முன்பாக 'எலியட்' அவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள் Elliot@wacoss.org.au
- **காட்சிப்படுத்துவதற்கு முன்பாக இந்த ஒளித்-தகட்டினை அகற்றுங்கள்/ மறைத்துவையுங்கள், மற்றும் கடைசி ஒளித்தகட்டில் அடுத்த அமர்விற்கான நேரம்/ திகதியைப் புதுப்பியுங்கள்.**

# இந்த நாட்டு பூமிக்காக பூர்வ பழங்குடியினருக்கு நன்றி நவிலல்

ஆபோரிஜினிப் பூர்வகுடி மக்களது நிலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதை நாமறிவோம். இந்த நிலங்களைச் சேர்ந்த ஆபொரிஜினி மக்களுக்கு நாங்கள் மதிப்பு–மரியாதை செலுத்துகிறோம். ஆபொரிஜினிப் பூர்வகுடி மக்கள் பல ஆண்டுகளாக இந்த நிலத்தில் பல ஆண்டுகளாக வாழ்ந்துவருகின்றனர்.

ஆபொரிஜினிப் பூர்வகுடிகள் அனைத்தொர்ரையும் அவர்களது மூத்தொர்களையும் நாங்கள் மதித்து அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறோம்.

அவர்களது கதைகளிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள இயலுமானது ஏராளமாகும்.

இந்த பூமி எப்போதுமே ஆபொரிஜினிப் பூர்வகுடியினருடையதாகவே இருந்துவந்திருக்கிறது, இனியும் அவ்வாறே நீடிக்கும்.

# மின்னஞ்சல்

## WA Digital Inclusion Project

# இந்த அமர்வைப் பற்றிய மேலோட்டம்

**இந்த அமர்வு பின் வருவனவற்றை உள்ளடக்கும்:**

- மின்னஞ்சல் என்றால் என்ன, மற்றும் அதை எதற்காகப் பாவிக்கலாம்
- மின்னஞ்சல் கணக்கு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளல்
- மின்னஞ்சலைப் பாவித்தல்
- மின்னஞ்சல் விடயத்தில் பாதுகாப்பாக இருத்தல்

# அறிமுகங்கள்

- குழுவினருக்கு உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுங்கள்.
- உங்களுக்குள்ள அனுபவங்களைப் பங்குபற்றுநர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள் –– உங்களுக்கு மின்னஞ்சல் முகவரி ஒன்று இருக்கிறதா, மற்றும் அதை எதற்காகப் பயன்படுத்தியிருக்கிறீர்கள்?




# மின்னஞ்சல் என்றால் என்ன?


- அனுப்புதல் மற்றும் பெறுதல்
- கோப்புகளை இணைத்தல்
- சொந்த, மற்றும் வேலை சம்பந்தப்பட்ட விடயங்களுக்கான பயன்பாடு
- சேவைகளைப் பெறுவதற்கான உள்-நுழைவு

# மின்னஞ்சல் சேவை வழங்குநர்கள்

- **மின்னஞ்சல் சேவை ஒன்றைத் தெரிவு செய்தல்:** ‘ஜீ–மெய்ல்’, அவுட்லுக்’ மற்றும் ‘யாஹூ’ ஆகியன தெரிவுகளில் உள்ளடங்கும்.
- **புதிய மின்னஞ்சல் கணக்கு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளல்:** ‘பயனர் பெயர்’ (username ) ஒன்றையும்,வலுவான கடவுச்சொல் ஒன்றையும் தெரிவு செய்யுங்கள்.

# மின்னஞ்சல்களை எழுதுதல்





புதிய செய்தி

From digitalinclusion@wacoss.org.au

To you@youremail.com

Cc Bcc

Subject நினைவூட்டி: கணினித் திறன்கள்: பணிமனை– மின்னஞ்சல்

அன்புள்ள [நண்பருக்கு]
நீங்கள் நலமாய் இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

மின்னஞ்சலைப் பற்றி நடக்கவிருக்கும் 'கணினித் திறன்கள் பணிமனை' ஒன்றைப் பற்றி உங்களுக்கு நினைவூட்டுவதற்காக இந்த மின்னஞ்சலை உங்களுக்கு அனுப்புகிறேன். மின்னஞ்சல் கணக்கு ஒன்றை எப்படி ஏற்படுத்திக்கொள்வது, மின்னஞ்சல் ஒன்றை எப்படி எழுதுவது, மின்னஞ்சல்களுக்கு எப்படிப் பதிலளிப்பது, மற்றும் மின்னஞ்சல்கள் விடயம் குறித்து இணையத்தில் எப்படிப் பாதுகாப்பாக இருப்பது என்பதைப் பற்றி இந்தப் பணிமனையில் நாம் கற்றுக்கொள்வோம்.

உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருந்தால், பின் வரும் மின்னஞ்சல் முகவரியில் என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்: digitalinclusion@wacoss.org.au

உங்களை அமர்வில் சந்திக்க விழைகிறேன்.
எலியெட்
'மூத்த பயிற்சி மற்றும் திட்ட அலுவலர்'
WA கணினிப் பயிற்சித் திட்டம்

Send

# உங்களுடைய மின்னஞ்சல் முகவரியைப் பாவித்தல்

- வெவ்வேறு சேவைகளுக்குள் நுழைதல்
  - அரசாங்க சேவைகள் (மை-கவ்)
  - இணைய-வழி வங்கி வேலைகள்
  - பொருள்-வாங்கு வலைத்தலங்கள்
  - சமூக ஊடகங்கள்
- ஒவ்வொரு சேவைக்குமென வெவ்வேறு கடவுச்சொற்களைப் பாவியுங்கள்
- கடவுச்சொற்கள் நீண்டவையாகவும், வலிவானவையாகவும் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள்.






# மின்னஞ்சல் விடயத்தில் கவனமாக இருங்கள்

‘கொக்கியிடும்’ (ஃபிஷிங்க்’) மின்னஞ்சல்கள்

- தகவல்களைத் திருட அனுப்பப்படும் போலி மின்னஞ்சல்கள்
- உண்மையானவை போலத் தோன்றும், ஆனால் இவை மோசடிகளாகும்
- சந்தேகத்திற்கிடமான இணைப்புகள் மீது சொடுக்காதீர்கள்
- உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்துகொள்ளாதீர்கள்
- கொக்கியிடும் மின்னஞ்சல்களைப் பற்றிப் புகார் செய்யுங்கள்



# கொக்கியிடும் மோசடிகள்

இது ஒரு போலி மின்னஞ்சல் என்பதற்கான அடையாளங்கள் யாவை?

**From:** Australian Taxation Office <kazu-h@mve.biglobe.ne.jp>
**Date:** 4 May 2023 at 05:54:20 GMT +8
**To:** email@email.com
**Subject: Your refund tax are now available for reviewing. (Ref: 00093-374290-000)**

Australian Government
Australian Taxation Office

COMMUNICATION OF INCIDENCE IN THE 2021-2022 INCOME STATEMENT.

In relation to the resolution issued by this Provincial Directorate of the Australian Taxation Office, we have recalculated your last taxable income declaration (Model 100. Personal income tax. Annual declaration).

This resolution informs that it has pending receipt of $520.64 AUD.

You must request it within 10 business days confirming your bank account with IBAN by email at refund@review-ato-office-australia.com.

You must attach the IBAN number along with proof that you are the owner of said account, attaching a photocopy of both sides of the Driver's Licence and Medicare Card.

After said term, the corresponding resolution will be issued.

WA digital inclusion project

இது ஒரு அரசாங்க மின்னஞ்சல் முகவரி அல்ல

**From:** Australian Taxation Office <kazu-h@mve.biglobe.ne.jp>

**Date:** 4 May 2023 at 05:54:20 GMT+8

**Subject: Your refund tax are now available for reviewing. (Ref: 000000-000093-374290-000)**

Australian Government

Australian Taxation Office

இந்த சின்னம் ATO வலைத்தலத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது

ஆளறி-அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான 100 புள்ளி ஆவணங்களைத் தருமாறு இந்த மின்னஞ்சல் உங்களை கேட்கிறது. இப்படிப்பட்ட தகவல்களை மின்னஞ்சல் மூலமாக அரசாங்கம் ஒருபோதும் கேட்காது!

In relation to the resolution issued by this Provincial Directorate of the Australian Taxation Office, we have recalculated your last taxable income declaration (Model 100. Personal income tax. Annual declaration).

This resolution informs that it has pending receipt of $520.64 AUD.

You must request it within 10 business days confirming your bank account with IBAN by email at refund@review-ato-office-australia.com.

You must attach the IBAN number along with proof that you are the owner of said account, attaching a photocopy of both sides of the Driver's Licence and Medicare Card.


இது நம்ப இயலாத அளவிற்கு மிகவும் நல்லது போலத் தோன்றுகிறது. ATO உங்களுக்குத் தரவேண்டிய பாக்கித் தொகை எதுவும் இருக்கிறதா என்று அவர்களைக் கேளுங்கள் அல்லது உங்களுடைய 'மை-கவ்' கணக்கிற்குள் சென்று சோதித்துப் பாருங்கள்.

அவசர உணர்வு ஒன்றை இது தோற்றுவிக்கிறது

# மீள்பார்வை

- மின்னஞ்சல் என்றால் என்ன, மற்றும் அதை எதற்காகப் பாவிக்கலாம்
- மின்னஞ்சல் கணக்கு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளல்
- மின்னஞ்சலைப் பாவித்தல்
- மின்னஞ்சல் விடயத்தில் கவனமாக இருத்தல் (கொக்கியிடல்!)





# நன்றி!

அடுத்த அமர்விக்கான நேரம்:

WA digital inclusion project

நன்றி

சமூக வெற்றியாளர் திட்டம்

lotterywest

wacoss wa council of social service